




# சக்கர வியூகம்

SAKKRA VIYUGAM

புலனாய்வு நாளிதழ்

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"








Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 274 28.03.2026 SATURDAY PANGUNI: 14 PRICE : RS.5/-

மலர் : 01 இதழ் : 274 28.03.2026 சனிக்கிழமை பங்குனி : 14 விலை : ரூ.5/–


## மற்றவர்களை போல இல்லை

# "மோடியை புகழ்ந்த டிரம்ப்!"

## தென் மாவட்டங்களில் 22ல் 12 தொகுதிகளில் போட்டி அதிமுகவினர் அதிருப்தி

திருநெல்வேலி: மார்ச்.28-

திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய தென் மாவட்டங்களில் மொத்தம் உள்ள 22 சட்டப்பேரவை தொகுதிகளில் அதிமுக 12 தொகுதிகளிலும், 7ல் பாஜகவும் போட்டி யிடுகின்றன.

தமிழக சட்டப்பேரவை தேர்தலில் அதிமுக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி போட்டியிடும் தொகுதிகள் குறித்த விவரங்களை அதிமுக பொதுச்செயலர் பழனிசாமி நேற்று முன்தினம் வெளியிட்டிருந்தார்.

அதில் திருநெல்வேலி, தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி ஆகிய 4 தென்மாவட்டங்களில் உள்ள 22 சட்டப்பேரவை தொகுதிகளில் அதிமுக போட்டியிடும் தொகுதிகள் வருமாறு: விளாத்திகுளம், தூத்துக்குடி, ஸ்ரீவைகுண்டம், கோவில்பட்டி, சங்கரன்கோவில், கடையநல்லூர், தென்காசி, ஆலங்குளம், திருநெல்வேலி, அம்பாசமுத்திரம், பாளையங்கோட்டை, கன்னியாகுமரி ஆகிய 12 தொகுதிகளில் அதிமுக நேரடியாக போட்டியிடுகிறது.

தூத்துக்குடி, தென்காசி மாவட்டங்களில் தலா 4 தொகுதிகளிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் 3 தொகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் 1 தொகுதியிலும் அதிமுக களம் காண்கிறது.

பாஜக போட்டியிடும் தொகுதிகள் வருமாறு: ராதாபுரம், நாகர்கோவில், விளவங்கோடு, குளச்சல், பத்மநாபபுரம், திருச்செந்தூர், வாசுதேவநல்லூர். நாங்குநேரி மற்றும் ஓட்டப்பிடாரம் தொகுதிகளில் அமமுகவும், கிள்ளியூர் தொகுதியில் தமாகாவும் போட்டி யிடுகின்றன.

கடந்த 2021 சட்டப் பேரவை தேர்தலில் திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, அம்பாசமுத்திரம், நாங்குநேரி, ராதாபுரம் ஆகிய 4 தொகுதிகளிலும், தூத்துக்குடி மாவட்டத்தில் தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவைகுண்டம், ஓட்டப்பிடாரம், கோவில்பட்டி, விளாத்திகுளம் ஆகிய 6 தொகுதிகளிலும், தென்காசி மாவட்டத்தில் தென்காசி, கடையநல்லூர், சங்கரன்கோவில், வாசுதேவநல்லூர், ஆலங்குளம் ஆகிய 5 தொகுதிகளிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி, பத்மநாபபுரம் ஆகிய 2 தொகுதிகளிலுமாக மொத்தம் 17 தொகுதிகளில் அதிமுக போட்டி யிட்டிருந்தது.

இம்முறை இந்த எண்ணிக்கை கணிசமாக குறைந்துள்ளது. இது இந்த 4 மாவட்டங்களில் உள்ள அதிமுகவினருக்கு உற்சாக குறைவை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் கன்னியாகுமரி தொகுதியை தவிர்த்து மற்ற 5 தொகுதிகளிலும் பாஜகவும், தமாகாவும் தாமரை சின்னத்தில் களமிறங்குகின்றன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அதிமுகவினர் போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

இம்மாவட்டத்தில் கடந்த சட்டப்பேரவை தேர்தலில் நாகர்கோவில், குளச்சல், விளவங்கோடு தொகுதிகளில் பாஜக போட்டியிட்டிருந்தது. அதில், நாகர்கோவில் தொகுதியில் மட்டும் எம்.ஆர். காந்தி வெற்றிபெற்றிருந்தார்.

கிள்ளியூர் தொகுதி தமாகாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்தது. இந்த தேர்தலில் அதிமுகவுக்கு அதிக தொகுதிகள் கிடைக்கும் என்று எதிர்பார்த்திருந்த நிலையில், தொகுதிகள் குறைக்கப்பட்டதால் அதிமுகவினர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதுபோல், திருநெல்வேலி மாவட்டத்தில் நாங்குநேரி தொகுதியை கூட்டணி கட்சியான அமமுகவுக்கு ஒதுக்கியதால் அதிருப்தி அடைந்த இத்தொகுதி முன்னாள் அதிமுக எம்எல்ஏ நாராயணன், கட்சியிலிருந்து விலகவுள்ளதாக கட்சி வட்டாரங்களில் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது.

இதுபோல், ராதாபுரம் தொகுதியையும் பாஜகவுக்கு விட்டுக்கொடுத்துள்ளதால் இத்தொகுதியில் எம்எல்ஏ கனவுடன் வலம்வந்த அதிமுக பிரமுகர்கள் சோர்வடைந்துள்ளனர்.

புதுடில்லி: மார்ச்.28-

மற்றவர்களைப் போல இல்லை. பிரதமர் மோடியும், நானும் காரியங்களை செய்து முடிப்பவர்கள் என பிரதமர் மோடியை அமெரிக்க அதிபர் டிரம்ப் பாராட்டி உள்ளார்.

மேற்கு ஆசியாவில் போர் நடைபெற்று வரும் சூழலில், ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் மூடியிருக்கிறது. கப்பல் போக்குவரத்து தடைபட்டு சர்வதேச அளவில் எண்ணெய் வர்த்தம் பாதிக்கப்பட்டு உள்ளது. கடந்த 24ம் தேதி அமெரிக்க அதிபர் டிரம்ப், நமது பிரதமர் மோடியுடன் மேற்கு ஆசியா போர் தொடர்பாக போனில் பேசினார்.



ஹார்முஸ் ஜலசந்தியை திறந்தே வைத்திருப்பதன் முக்கியத்துவம், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள நிலவரம் குறித்து அவர்கள் கலந்துரையாடினர். இச்சூழலில், இந்தியாவுடனான அமெரிக்காவின் அற்புதமான உறவு இனிவரும் காலங்களில் மேலும் வலுப்பெறும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறி யிருக்கிறார்.

மற்றவர்களைப் போல இல்லை. பிரதமர் மோடியும், நானும் காரியங்களை செய்து முடிப்பவர்கள். இதர பெரும்பாலனவர்களை பற்றி இப்படி கூறிவிட முடியாது என்று டிரம்ப் கூறியிருக்கிறார். இதை இந்தியாவில் உள்ள அமெரிக்க தூதரகம் பதிவிட்டு உள்ளது. அதில், பிரதமர் மோடியின் கையை, அதிபர் டிரம்ப் இரு கைகளால் பற்றிக்கொண்டு இருக்கும் போட்டோ இடம்பெற்றுள்ளது.

## வெளி மாவட்டத்தில் தேர்தல் பணி ஒதுக்கியதால் ஆசிரியர்கள் அதிர்ச்சி!

கோவில்பட்டி/ தென்காசி: மார்ச்.28-

தமிழக சட்டப்பேரவை தேர்தல் ஏப்.23ம் தேதி நடைபெற உள்ள நிலையில், கோவில்பட்டி வட்டத்துக்கு உட்பட்ட பிள்ளையார்நத்தம், இளையரசனேந்தல் ஆகிய கிராமங்களில் உள்ள பள்ளிகளைச் சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு தென்காசி மாவட்டத்தில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

இவர்களுக்கான முதல் கட்ட பயிற்சி முகாம் சங்கரன் கோவில் கோமதி அம்பாள் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நாளை (28ம் தேதி) நடைபெற உள்ளது. வெளிமாவட்டங்களில் உள்ள தொகுதிகளில் பணி ஒதுக்கீடு பெற்றுள்ள ஆசிரியைகள் 3 கட்ட பயிற்சி வகுப்புகளுக்கு சம்பந்தப்பட்ட பள்ளிகளுக்கு செல்ல வேண்டும்.

தொடர்ந்து ஏப்.22, 23ம் தேதி தேர்தல் பணி செய்ய வேண்டும். வாக்குப்பதிவு இயந்திரம் எடுத்துச் செல்லும் வரை மையத்தில் காத்திருக்க வேண்டும். நள்ளிரவு நேரம் வந்து வாக்குப்பதிவு இயந்திரங்களை எடுத்துச் சென்றால், அதன் பின்னர் ஆசிரியைகள் வீடு திரும்புவதில் சிக்கல் ஏற்படும். எனவே, சொந்த மாவட்டங்களிலேயே உள்ள தொகுதிகளில் தேர்தல் பணி ஒதுக்கீடு செய்ய வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளனர்.



இதுகுறித்து முன்னாள் ராணுவவீரர் அ.ஜெயப் பிரகாஷ் நாராயணசாமி கூறியதாவது: கடந்த நாடாளுமன்றம் மற்றும் சட்டப் பேரவை தேர்தல்களில் ஆசிரியைகளுக்கு தூத்துக்குடி மாவட்ட வரம்புக் குள் தேர்தல் பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டு தேர்தல் பணி செய்தனர்.

தற்போது சட்டப்பேரவை தேர்தலில் பணி தென்காசி மாவட்ட வரம்புக்குள் இணைக்கப்பட்டு தேர்தல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. தேர்தல் பணியில் ஈடுபடும் ஆசிரியைகள் பயிற்சிக்காக சுமார் 40 கி.மீ. அலைய வேண்டும்.

எனவே, இதற்கு முன்பு தேர்தல் பணி ஒதுக்கீடு செய்தபடியே இந்தாண்டும் தூத்துக்குடி மாவட்ட வரம்புக்குள் தேர்தல் பணி வழங்க உரிய ஆவண செய்ய வேண்டும். தென்காசி மாவட்டத்தில் வாக்குச் சாவடி தலைமை அலுவலர் பொறுப்பு பள்ளி தலைமை ஆசிரியர்கள், முதுகலை பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் கல்லூரி பேராசிரியர்களுக்கு மட்டுமே வழங்கப்படும்.

ஆனால், இந்த தேர்தலில் தென்காசி மாவட்டத்தில் தொடக்கப்பள்ளி ஆசிரியர்கள், பட்டதாரி ஆசிரியர்கள், அரசு அலுவலக எழுத்தர்கள் உள்ளிட்டோருக்கு வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது. இதனை தென்காசி மாவட்ட தேர்தல் அதிகாரி விசாரித்து பணி ஒதுக்கீட்டை வரைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

இதற்கிடையே, இந்திய பள்ளி ஆசிரியர் கூட்டமைப்பு மாவட்ட ஒருங்கிணைப்பாளர் மா.கலை உடையார் தூத்துக்குடி மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருக்கு அனுப்பியுள்ள மனுவில்,, ''பிள்ளையார்நத்தம், இளையரசனேந்தல் அரசு மேல்நிலைப் பள்ளிகளைச் சேர்ந்த 40 ஆசிரியர்களுக்கு தென்காசி ஆட்சியரால் தேர்தல் பணி ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டம் விட்டு மாவட்டம் தேர்தல் பணி யாற்றும் இந்த நிலை பள்ளி ஆசிரியர்களிடையே மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. எனவே, தூத்துக்குடி மாவட்டத்துக்குள் தேர்தல் பணியாணை வழங்க வேண்டும், என தெரிவித்துள்ளார்.

## 2வது கட்டமாக 127 தொகுதிகளுக்கு வேட்பாளர் பட்டியலை வெளியிட்டார் இபிஎஸ்

சென்னை: மார்ச்.28-

அதிமுகவின் 2வது கட்டமாக 127 தொகுதிகளுக்கான வேட்பாளர் பட்டியலை அக்கட்சி பொதுச்செயலர் இபிஎஸ் வெளியிட்டார்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அதிமுகவின் முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை இபிஎஸ் வெளியிட்டு இருந்தார். அதில் 23 வேட்பாளர்கள் இடம்பெற்று இருந்தனர்.

இந்நிலையில் 2வது கட்டமாக 127 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களின் பட்டியலை இபிஎஸ் வெளியிட்டார்.

இதன்படி,

1. கும்மிடிப்பூண்டி வி.சுதாகர்
2.பொன்னேரி சிறுணியம் பலராமன்
3.திருத்தணி கோ.அரி
4.திருவள்ளூர் முன்னாள் அமைச்சர் ரமணா
5.மாதவரம் முன்னாள் அமைச்சர் மூர்த்தி
6.திருவொற்றியூர் குப்பன்
7.ஸ்ரீபெரும்புதூர் பழனி
8.தாம்பரம் முன்னாள் எம்பி சிட்லபாக்கம் ராஜேந்திரன்
9.செங்கல்பட்டு கஜா என்ற கஜேந்திரன்
10.செய்யூர்(தனி) ராஜசேகர்
11.மதுராந்தகம் (தனி) மரகதம் குமரவேல்
12.காஞ்சிபுரம் சோமசுந்தரம்
13.அரக்கோணம்(தனி) ரவி
14.காட்பாடி ராமு
15.ஆற்காடு சுகுமார்
16.வேலூர் அப்பு
17.அணைக்கட்டு வேலழகன்
18.குடியாத்தம் பரிதா புருஷோத்தமன்
19.வாணியம்பாடி செந்தில்குமார்
20.ஆம்பூர் வெங்கடேசன்
21.ஊத்தங்கரை தமிழ்செல்வம்
22.பர்கூர் கோவிந்தராசன்
23.கிருஷ்ணகிரி அசோக்குமார்
24.ஓசூர் பாலகிருஷ்ணரெட்டி
25.பாப்பிரெட்டிபட்டி மரகதம் வெற்றிவேல்
26.அரூர்(தனி) சம்பத்குமார்
27.செங்கம் (தனி) வேலு
28.கீழ்பென்னாத்தூர் ராமச்சந்திரன்
29.ஆரணி ஜெயசுதா
30.செய்யார் முக்கூர் சுப்பிரமணியன்
31.வந்தவாசி(தனி) ராணி
32.திண்டிவனம்(தனி) அர்ஜூனன்
33.வானூர்( தனி) முருகன்
34.விழுப்புரம் விஜயா
35.திருக்கோயிலூர் பழனிசாமி
36.உளுந்தூர்பேட்டை குமரகுரு
37.சங்கராபுரம் ராகேஷ்
38.கள்ளக்குறிச்சி(தனி) ராஜீவ்காந்தி
39.கங்கவல்லி( தனி) நல்லதம்பி
40.ஆத்தூர்( தனி) ஜெயசங்கரன்
41.ஏற்காடு உஷாராணி
42.ஓமலூர் மணி
43.மேட்டூர் வெங்கடாஜலம்
44.சங்ககிரி வெற்றிவேல்
45.சேலம்(தெற்கு) வினோத்
46.வீரபாண்டி பாலாஜி சுகுமார்



47.சேந்தமங்கலம் சந்திரசேகரன்
48.நாமக்கல் ஸ்ரீதேவி பி.எஸ். மோகன்
49.பரமத்தி வேலூர் சேகர்
50.திருச்செங்கோடு சந்திரசேகர்
51.ஈரோடு(கிழக்கு) மனோகரன்
52.தாராபுரம்( தனி) சத்தியபாமா
53.காங்கயம் நடராஜ்
54.பெருந்துறை ஜெயக்குமார்
55.அந்தியூர் ஹரிபாஸ்கர்
56.கோபிசெட்டிபாளையம் பிரபு
57.பவானிசகர் பண்ணாரி
58.கூடலூர்(தனி) பொன் ஜெயசீலன்
59.குன்னூர் ராமு
60.மேட்டுப்பாளையம் சின்னராஜ்
61.திருப்பூர் வடக்கு முன்னாள் அமைச்சர் எம்எஸ்எம் ஆனந்தன்
62.பல்லடம் பரமசிவம்

தேர்தல் அறிக்கை, பிரசாரம், வேட்பாளர் பட்டியல்; அனைத்திலும் முதலில் களமிறங்கிய இபிஎஸ்

தேர்தல் அறிக்கை, பிரசாரம், வேட்பாளர் பட்டியல்; அனைத்திலும் முதலில் களமிறங்கிய இபிஎஸ்

63.சூலூர் கந்தசாமி
64.கவுண்டம்பாளையம் அருண்குமார்
65.கோவை தெற்கு அம்மன் அர்ஜூனன்
66.சிங்காநல்லூர் ஜெயராம்
67.கிணத்துக்கடவு தாமோதரன்
68.பொள்ளாச்சி முன்னாள் அமைச்சர் ஜெயராமன்
69.வால்பாறை லட்சுமண சிங்
70. உடுமலை முன்னாள் அமைச்சர் ராதாகிருஷ்ணன்
71.பழநி ரவி மனோகரன்
72.ஆத்தூர் விஸ்வநாதன்
73. நிலக்கோட்டை(தனி) தேன்மொழி
74.வேடசந்தூர் பரமசிவம்
75.அரவக்குறிச்சி செல்வக்குமார்
76.கிருஷ்ணராயபுரம் திவ்யா
77.குளித்தலை கருணாகரன்
78.மணப்பாறை விஜயகுமார்
79.ஸ்ரீரங்கம் மனோகரன்
80.திருச்சி கிழக்கு ராஜசேகரன்
81.திருவெறும்பூர் குமார்
82.லால்குடி லீமாரோஸ்
83.முசிறி யோகநாதன்
84.துறையூர் சுரோஜா
85.பெரம்பலூர் தமிழ்செல்வன்.
86.நெய்வேலி ராஜேந்திரன்
87.கடலூர் மோகன்
88.குறிஞ்சிப்பாடி புவனேந்திரன்
89.புவனகிரி அருண்மொழித்தேவன்
90.பண்ருட்டி மோகன்
91.சிதம்பரம் பாண்டியன்
92.சீர்காழி சக்தி
93.பூம்புகார் பவுன்ராஜ்
94.நாகப்பட்டினம் தங்க. கதிரவன்
95. திருத்துறைப்பூண்டி ( தனி) பாலதண்டாயுதம்
96. திருவிடைமருதூர் இளமதி சுப்பிரமணியன்
97.பாபநாசம் சண்முகபிரபு
98.ஒரத்தநாடு எம். சேகர்
99.பட்டுக்கோட்டை சி.வி. சேகர்
100.பேராவூரணி கோவி. இளங்கோ
101.திருமயம் வைரமுத்து
102.சிவகங்கை செ ந்தில்நாதன்
103.மேலூர் பெரியபுள்ளான் என்ற செல்வம்
104.மதுரை கிழக்கு மகேந்திரன்
105. சோழவந்தான் மாணிக்கம்
106. மதுரை வடக்கு சரணவன்
107.உசிலம்பட்டி மகேந்திரன்
108.ஆண்டிப்பட்டி லோகிராஜன்
109. போடி நாராயணசாமி
110. கம்பம் ஜக்கையன்
111. ஸ்ரீவில்லிபுத்தூர்( தனி) சந்திர பிரபா
112.விருதுநகர் கணேசன்
113.அருப்புக்கோட்டை சேதுபதி
114. பரமக்குடி ( தனி) முத்தையா
115.திருவாடனை கீர்த்திகா முனியசாமி
116.முதுகுளத்தூர் மலேசியா பாண்டி
117.விளாத்திகுளம் சத்யா
118.தூத்துக்குடி முன்னாள் அமைச்சர் செல்லப்பாண்டியன்
119.ஸ்ரீவைகுண்டம் முன்னாள் அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன்
120.சங்கரன்கோவில் ( தனி) திலிபன் ஜெய்சங்கர்
121.கடையநல்லூர் கிருஷ்ணமுரளி
122.தென்காசி செல்வமோகன்தாஸ்
123.ஆலங்குளம் பிரபாகரன்
124.திருநெல்வேலி கணேசராஜா
125.அம்பாசமுத்திரம் முன்னாள் அமைச்சர் இசக்கி சுப்பையா
126.பாளையங்கோட்டை சையது சுல்தான் சம்முதீன்
127.கன்னியாகுமரி முன்னாள் அமைச்சர் தளவாய் சுந்தரம் ஆகியோர் வேட்பாளர்களாக அறிவிக்கப்பட்டுள்ளர்.

அதிமுக 167 தொகுதிகளில் போட்டியிடுகிறது. ஏற்கனவே 23 தொகுதிகளுக்கு வேட்பாளர் அறிவிக்கப்பட்ட நிலையில், இன்று 127 தொகுதிகளுக்கு வேட்பாளர் அறிவிக்கப்பட்டுள்ளனர். இன்னும் 17 தொகுதிகளுக்கு வேட்பாளர் இன்னும் அறிவிக்கப்பட வேண்டி உள்ளது. 150 பேர்களில் 17 பேர் பெண் வேட்பாளர்கள். 46 பேர் சிட்டிங் எம்எல்ஏக்கள். இன்று அறிவிக்கப்பட்ட 127 வேட்பாளர்களில் 7 பேர் டாக்டர்கள். 5 பேர் பிஇ பட்டம் பெற்றவர்கள் ஆவார்கள்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர் கே.ஜே.பிரவீன்குமார் தலைமையில்தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல்2026 நடைபெறுவதை முன்னிட்டு மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரி மற்றும் யங் இந்தியன்ஸ் சங்கம் இணைந்து கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்ட 100% வாக்களிப்போம், என் வாக்கு என் கடமை என பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் உறுதிமொழி எடுத்துக் கொண்டு முதன் முறை வாக்காளர்களுக்கு வாக்களிப்பதன் அவசியம் குறித்து சிறப்புரையாற்றினார்கள்.



■ மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் தலைமையில் மாநகர காவல் ஆணையார் முனைவர் லோகநாதன், முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சித்திரை திருவிழா மற்றும் அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் ஆகிய நிகழ்ச்சிகளின் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் தொடர்புடைய அலுவலர்களுடன் நடைபெற்றது. மாநகராட்சி ஆணையாளர் சித்ராவிஜயன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அரவிந்த், மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன், ஆகியோர் உடன் உள்ளனர்



■ தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில், தேசிய ஜனநாயக கூட்டணியின் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினர் வேட்பாளராக திலீபன் ஜெய்சங்கர் அவர்களை அறிவித்தவுடன், சங்கரன்கோவில் சட்டமன்ற தொகுதியில் அதிமுக கழக நிர்வாகிகளும், பாரதிய ஜனதா கட்சி சங்கரன்கோவில் நகரத் தலைவர் **UBV** உதயகுமார் மற்றும் நிர்வாகிகளும் ஒன்று கூடி மகிழ்ச்சியுடன் இனிப்பு வழங்கி,கொண்டாடினர்.



## சிந்தாமணியில் பாலகங்கா பரமேஸ்வரி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்

புளியங்குடி. மார்ச் 28:

தென்காசி மாவட்டம் புளியங்குடி அருகே உள்ள சிந்தாமணி பகுதியில் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ பாலகங்கா பரமேஸ்வரி அம்மன் திருக்கோவில் மகா கும்பாபிஷேக விழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி பூஜை, கோபூஜை மற்றும் தம்பதி பூஜை உள்ளிட்ட பல்வேறு சிறப்புப் பூஜைகள் நடைபெற்றன. கோவில் விமானக் கோபுரத்தில் உள்ள கலசத்திற்குப் புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது. விழாவிற்கு வருகை தந்த பக்தர்களுக்குப் பிரசாதம் மற்றும் அன்னதானம் வழங்கப்பட்டது.

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைத் திருக்கோவில் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, செயலாளர் முத்துராஜ், பொருளாளர் முப்புடாதி, மேற்பார்வையாளர் முரளிதரன் மற்றும் விழா நிர்வாகக் குழுவினர் ஊர் பொதுமக்களுடன் இணைந்து சிறப்பாகச் செய்திருந்தனர்.

## திருத்தணி முருகன் கோயில் உண்டியலில் பக்தர்கள் ரூ.1.35 கோடி காணிக்கை

திருத்தணி, மார்ச்.,28-

அறுபடை வீடுகளில் ஒன்றான திருத்தணி முருகன் கோயிலுக்கு நாள்தோறும் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து நேர்த்திக்கடன்களை செலுத்திவிட்டு, உண்டியல்களில் தங்களின் பணம், நகை மற்றும் வெள்ளி பொருட்களை காணிக்கையாக செலுத்தி வருகின்றனர். இதைத் தொடர்ந்து, திருத்தணி முருகன் கோயில்



உண்டியல்களில் பக்தர்கள் காணிக்கையாக செலுத்தும் பணம், நகை உள்ளிட்ட பல்வேறு பொருட்களை 28 நாட்களுக்கு ஒருமுறை எண்ணுவது வழக்கம்.

அதன்படி நேற்று கோயில் இணை ஆணையர் ரமணி, அறங்காவலர்கள் சுரேஷ்பாபு, உஷா ரவி, மோகனன் ஆகியோர் முன்னிலையில் உண்டியல் காணிக்கை எண்ணும் பணி நடைபெற்றது. கோயில் உண்டியல்களில் பக்தர்கள் ரூ.1 கோடியே 35 லட்சத்து 97 ஆயிரத்து 219 ரொக்கப் பணம், 468 கிராம் தங்கம், 13.890 கிராம் வெள்ளி பொருட்களை காணிக்கையாக செலுத்தியிருப்பது தெரியவந்தது. இவை அனைத்தும் கோயில் வங்கி கணக்கில் இருப்பு வைக்கப்படும் என்று கோயில் நிர்வாகம் சார்பில் தெரிவிக்கப்பட்டது

# அரசியல் சேவையா? வேலையா?

## இன்றைய சூழலில் அரசியல் என்பது எந்தத் தராசில் நிற்கிறது!..

சென்னை, மார்ச்.,28-

"மக்களால், மக்களுக்காக, மக்களே நடத்தும் ஆட்சி" என்பது ஜனநாயகத்தின் இலக்கணம். ஆனால், இன்றைய சூழலில் அரசியல் என்பது எந்தத் தராசில் நிற்கிறது? ஒரு பக்கம் சுயநலமற்ற தியாகங்கள், மறுபக்கம் கோடிகளில் புரளும் அதிகார வணிகம். அரசியல் என்பது ஒரு புண்ணியமான 'சேவையா' அல்லது லாபம் ஈட்டும் 'வேலையா'? அலசுகிறது இந்தச் சிறப்புக் கட்டுரை.




1. காலமாற்றம் கண்ட 'சேவை'

சுதந்திரப் போராட்டக் காலங்களில் அரசியல் என்பது ஒரு தவமாக இருந்தது. சொத்துக்களையும், சுகபோகங்களையும் துறந்து சிறைவாசம் புகுந்த தலைவர்கள் வாழ்ந்த மண் இது. அன்று அரசியல் என்பது 'கொடுப்பது'. இன்று பல இடங்களில் அரசியல் என்பது 'எடுப்பது' என்றாகிவிட்டது.

*2. 'வேலை'யாக மாறிய அரசியல்*

இன்றைய நவீன உலகில் அரசியல் ஒரு முழுநேரத் தொழிலாக (Full-time Career) மாறிவிட்டது.

முதலீடு

தேர்தலுக்காகச் செலவு செய்யப்படும் கோடிக்கணக்கான ரூபாய்.

*லாபம்:* வெற்றி பெற்ற பின் அந்த முதலீட்டைப் பன்மடங்காக எடுக்கத் துடிக்கும் வேட்கை.

*நிர்வாகம்:* மக்கள் பிரதிநிதி என்பது ஒரு பொறுப்பான பணி என்றாலும், அது 'வருமானம் தரும் வேலை'யாகப் பார்க்கப்படுவது ஜனநாயகத்தின் வீழ்ச்சி.

3. 'வியாபாரம்' எனும் விபரீதம்

சேவையும் இல்லை, வேலையும் இல்லை

அரசியல் என்பது இன்று ஒரு 'கார்ப்பரேட் வியாபாரம்' தொகுதிப் பங்கீடு முதல் வேட்பாளர் தேர்வு வரை 'பணபலம்' மட்டுமே பிரதானமாக இருக்கிறது. உழைப்பவர்களுக்கு இடமில்லாமல், பணப்பையைத் திறப்பவர்களுக்குப் பதவி கிடைக்கும் அவலத்தை அண்மையில் நாம் நாங்குநேரி போன்ற தொகுதிகளில் பார்க்கிறோம்.

அரசியல் என்பது ஒருவரின் பிழைப்பிற்கான 'வேலை'யாக இருக்கக் கூடாது. அது சமூகத்தின் காயங்களுக்கு மருந்தளிக்கும் 'சேவை'யாக இருக்க வேண்டும்.

" அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும்" இளங்கோவடிகளின் இந்த வரிகள் இன்றும் பொருந்தும். உழைப்பவர்களுக்கு மரியாதை தராத, பணத்திற்குப் பின்னால் ஓடும் அரசியல் ஒருபோதும் மக்கள் நலன் காக்காது. அரசியலை மீண்டும் 'சேவை'ப் பாதைக்குத் திருப்புவது வாக்காளர்களின் கைகளில்தான் உள்ளது!

## பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மேம்பாடு தொடர்பாக ஐஐடி அறக்கட்டளைராணுவம் ஒப்பந்தம்

சென்னை, மார்ச்.,28-

பாதுகாப்பு தொழில்நுட்பங்கள் மேம்பாடு தொடர்பாக, சென்னை ஐஐடி அறக்கட்டளையுடன், இந்திய ராணுவம் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.

பாதுகாப்பு தொழில்நுட்பங்களை மேம்படுத்துவது, ராணுவத் தொழில்நுட்பங்களில் வெளிநாடுகளை சார்ந்திருப்பதை குறைப்பது தொடர்பாக, சென்னை ஐஐடி பிரவர்தக் டெக்னாலஜீஸ் அறக்கட்டளையுடன், இந்திய ராணுவத்தின் எலெக்ட்ரானிக்ஸ் அண்ட் மெக்கானிக்கல் இன்ஜினீயரிங் பிரிவு நேற்று புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.




பிரவர்தக் அறக்கட்டளையின் தலைமைச் செயல் அலுவலர் எம்.ஜெ.ஷங்கர் ராமன், இந்திய ராணுவத்தின் இஎம்இ பிரிவு கமாண்டிங் அதிகாரி மேஜர் ஜெனரல் லலித் கபூர் ஆகியோர் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். இந்த ஒப்பந்தத்தின் தொடர்ச்சியாக, ஆவடியில் ஆராய்ச்சி, கண்டுபிடிப்பு ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஒப்பந்தம் குறித்து மேஜர் ஜெனரல் லலித் கபூர் கூறும்போது, “ஐஐடி பிரவர்தக் அறக்கட்டளையுடன் இணைந்து செயல்படுவதன் மூலம் ராணுவத்தின் இஎம்இ பிரிவு, ராணுவ நடவடிக்கைகளையும், ஆயுதங்களின் தரத்தையும் மேம்படுத்துவதை குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

இதன்மூலம், பாதுகாப்பு தொழில்நுட்பங்களுக்கு வெளிநாடுகளைச் சார்ந்துள்ளதை கணிசமாக குறைக்க முடியும்’’ என்றார்.

ஐஐடி பிரவர்தக் அறக்கட்டளையின் வியூக ஆலோசகரும், தென்பிராந்திய ராணுவத்தின் முன்னாள் கமாண்டிங் அதிகாரியுமான லெப்டினென்ட் ஜெனரல் கரன் சிங் பிரார் கூறும்போது, “இந்த கூட்டு முயற்சி மூலம் கல்வி நிறுவனம் மற்றும் ராணுவத்தின் திறமைகளை ஒருங்கே பயன்படுத்த முடியும்’’ என்றார்.



## வங்காளம் உட்பட 11 மொழி பேசும் மனித ரோபோ

### அறிமுகம் செய்தார் மெலனியா ட்ரம்ப்

வாஷிங்டன், மார்ச்.28-

அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் நடைபெற்ற முதல் பெண்மணிகள் மாநாட்டில், வங்காள மொழி உட்பட 11 மொழிகள் பேசும் மனித ரோபோ அறிமுகம் செய்யப்பட்டது. உலகளாவிய கூட்டணியை ஏற்படுத்த 45 நாடுகளின் முதல் பெண்மணிகள் பங்கேற்கும் மாநாடு அமெரிக்க அதிபரின் வெள்ளை மாளிகையில் நேற்று நடைபெற்றது.

இதில் ஃபிகர் என்ற அமெரிக்க ரோபோட்டிக்ஸ் நிறுவனம் உருவாக்கிய மனித ரோபோ, வெள்ளை மாளிகையின் முதல் ரோபோ விருந்தாளியாக அறிமுகம் செய்யப்பட்டது. இந்த ரோபோ, மாநாட்டுக்கு தலைமை தாங்கிய மெலனியா ட்ரம்ப்புடன் இணைந்து வந்தது.

‘ஃபிகர் 3’ என்று பெயரிடப்பட்ட இந்த மனித ரோபோ, கூட்டத்தில் பங்கேற்ற வெளிநாடுகளைச் சேர்ந்த முதல் பெண்மணிகளை ஆங்கிலம், ஸ்பெனிஷ், பிரெஞ்சு, போர்ச்சுகீஸ், அராபிக், ஜாப்பனீஸ், ஹீப்ரு, ஸ்லோவேனி, உக்ரேனியன், ஜார்ஜியன் உட்பட 11 மொழிகளில் வரவேற்றது.

அது வங்காள மொழியில் ‘ஸ்வாகதம்’ என கூறியது. இந்த மனித ரோபோ வீட்டு வேலைகளை செய்வதற்காக உருவாக்கப்பட்ட இயந்திரம். இதில் கேமிராக்கள் மற்றும் உணர் கருவிகள் பொருத்தப்பட்டுள்ளன. இந்நிகழ்ச்சியில் அமெரிக்கா அதிபர் ட்ரம்ப்பின் மனைவி மெலனியா பேசியதாவது: என்னுடன் இணைந்ததற்காக ‘ஃபிகர் 3’க்கு நன்றி.

நீ தான் வெள்ளை மாளிகைக்கு வந்த அமெரிக்காவில் தயாரான முதல் மனித ரோபோ விருந்தாளி. கற்றலுக்கான செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு, மனித ரோபோ ஆசிரியர்கள், அமெரிக்க பொருளாதாரத்தை ஊக்குவிப்பதில் தொழில்நுட்பம் மற்றும் கல்வியின் பங்கு ஆகியவைதான் அடுத்த தலைமுறையை உருவாக்கும் 3 முக்கிய தூண்கள். செயற்கை நுண்ணறிவின் எதிர்காலம் மனித உருவம் கொண்டது.

அது மனித வடிவிலேயே அமையும். மிக விரைவில், செயற்கை நுண்ணறிவு நமது செல்போன்களிலிருந்து வெளியேறி, மக்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய மனித ரோபோக்களாக மாறும். இவ்வாறு அவர் கூறினார்.

## ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை நிர்வகித்த ஈரான் தளபதி அலிரேசா உயிரிழப்பு

ஈரான், மார்ச்.,28-

ஹார்முஸ் ஜலசந்தி பகுதியை நிர்வகித்த ஈரான் கடற்படைத் தளபதி அலிரேசா, இஸ்ரேல் விமானப் படை தாக்குதலில் உயிரிழந்தார்.

அமெரிக்கா ஈரான் போர் காரணமாக ஹார்முஸ் ஜலசந்தியை ஈரான் ராணுவம் மூடியிருக்கிறது. இதனால், உலகம் முழுவதும் கச்சா எண்ணெய், எல்பிஜி காஸுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

ஈரான் கடற்படை தளபதி அலிரேசா டாங்கிரி, ஹார்முஸ் ஜலசந்தி பகுதியின் பொறுப்பாள



ராக செயல்பட்டு வந்தார். சர்வதேச கடல் போக்குவரத்தை தடுத்து நிறுத்திய குற்றத்துக்காக அவரை சர்வதேச தீவிரவாதியாக அமெரிக்க அரசு அறிவித்திருந்தது. இந்த சூழலில், ஈரானின் பந்தர் அப்பாஸ் துறைமுக நகரின் பல்வேறு பகுதிகளை குறிவைத்து இஸ்ரேல் போர் விமானங்கள் நேற்று குண்டுகளை வீசின.

இதில், அலிரேசா டாங்கிரி உயிரிழந்தார். ஹார்முஸ் ஜலசந்தியில் எண்ணெய் கப்பல் போக்குவரத்தை முடக்கியதற்காக அவர் கொலை செய்யப்பட்டார் என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது. எனினும், அவரது உயிரிழப்பை ஈரான் ராணுவம் உறுதிசெய்யவில்லை.

## மதுரை அரசு மருத்துவமனையில் மருத்துவ அதிசயம் கருவிலேயே மரபணு நோய் கண்டறிதல் வெற்றி

மதுரை மார்ச். 28-

மதுரை அரசு இராசாசி மருத்துவமனையில், கர்ப்பிணிப் பெண்களுக்குக் கருவிலேயே மரபணு நோய்களைக் கண்டறியும் பனிக்குட நீர் ஆய்வு வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டு, ஆரோக்கியமான குழந்தை பிறந்துள்ள சம்பவம் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

*சாதனைப் பின்னணி:*

ஏற்கனவே 'தசைநார் சிதைவு' என்ற கொடிய மரபணு நோயால் ஒரு குழந்தையை இழந்த அனிதா என்ற பெண்ணுக்கு, அவர் மீண்டும் கருவுற்ற 18 வது வாரத்திலேயே இந்தப் பரிசோதனை



செய்யப்பட்டது. கதிரியக்கத்துறை மற்றும் தாய்சேய் நலப்பிரிவு இணைந்து மேற்கொண்ட இந்த ஆய்வில், கருவில் இருக்கும் குழந்தைக்கு அந்த நோய் இல்லை என்பது உறுதி செய்யப்பட்டது. தற்போது அந்தப் பெண் ஆரோக்கியமான குழந்தையைப் பெற்றுள்ளார்.

*முக்கியத்துவம்:*

இது குறித்து மருத்துவமனை முதல்வர் மருத்துவர் அருள்சுந்தரேஸ்குமார் கூறுகையில், "தமிழ்நாடு மற்றும் தேசிய சுகாதாரத் திட்டத்தின் கீழ், அரசு மருத்துவமனையிலேயே இத்தகைய உயர்தரப் பரிசோதனைகள் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் வாழ்நாள் முழுவதும் சிகிச்சை தேவைப்படும் நோய்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க முடியும், குடும்பங்களின் பொருளாதாரச் சுமையையும் குறைக்க முடியும்," என்றார்.

இந்நிகழ்வில் மருத்துவ கண்காணிப்பாளர் மருத்துவர் கார்த்திகேயன், தாய்சேய் நலப்பிரிவு தலைவர் மருத்துவர் வளர்மதி, உதவி பேராசிரியர்கள் மருத்துவர் ஸ்வாதி, மருத்துவர் அனிதா, குழந்தைகள் நலத்துறை மற்றும் ஆராய்ச்சி மைய தலைவர் மருத்துவர் நந்தினி குப்புசாமி, உதவி பேராசிரியர்கள் மருத்துவர் விஜய் பிரபு, மருத்துவர்செந்தில்குமார், கதிரியக்கத்துறை தலைவர் மருத்துவர் சுமதி, உதவி பேராசிரியர்கள் மருத்துவர் ராகவி, மருத்துவர்நரேந்திரன்,

உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# சட்டப்பேரவைத் தேர்தலில் புதிய தமிழகம் கட்சி தனித்துப் போட்டி

சென்னை, மார்ச்.,28-

புதிய தமிழகம் கட்சி இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட முடிவு செய்துள்ளதாக அக்கட்சி அறிவித்துள்ளது.

இது தொடர்பாக புதிய தமிழகம் கட்சி வெளியிட்டுள்ள அறிக்கையில், ''2026 சட்டமன்றத் தேர்தலில் புதிய தமிழகம் கட்சியின் நிலைப்பாடு குறித்து முடிவெடுக்க மார்ச் மாதம் 21ஆம் தேதி மதுரையிலும், 25, 26 ஆகிய தேதிகளில் கோவையிலும் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் நேர்காணல் கூட்டம் நடைபெற்றது.

கடந்த 30 ஆண்டுகள் தென்தமிழகத்தில் தொடர்ச்சியாக, அரசியல் களத்தில் நிலைத்து நின்று, செயல்பட்டு வரும் புதிய தமிழகம் கட்சிக்கு, கூட்டணியில் நமது கட்சியின் வலிமைக்கு ஏற்ப எண்ணிக்கையும், வெற்றி வாய்ப்புள்ள தொகுதிகளையும் வழங்குவதில் காட்டப்பட்ட



பாரபட்சம் குறித்து விவாதிக்கப்பட்டது.

ஒன்றரை கோடிக்கும் மேற்பட்ட தேவேந்திரகுல வேளாளர் மக்களின் பேராதரவுடன் இயங்கும் புதிய தமிழகம் கட்சிக்கு உரிய அரசியல் அங்கீகாரம் அளிக்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டுள்ளச் சூழலில், இத்தேர்தலில் தேவேந்திரகுல வேளாளர் சமூக மக்களின் தன்னிகரில்லாத் தலைவர் கிருஷ்ணசாமியின் கரத்தை வலுப்படுத்துவதும், நம் மக்கள் ஒன்றுபட்டு நிற்பதும், நம்மை புறக்கணித்தவர்களை நாம் புறக்கணிப்பதும் மட்டுமே 'உண்மையான அரசியல் வெற்றி' என்பதை நிலைநாட்டும் பொருட்டு, புதிய தமிழகம் கட்சி இந்தத் தேர்தலில் தனித்துப் போட்டியிட ஏகமனதாக முடிவு செய்யப்பட்டது.

கடந்த 25, 26 ஆகிய தேதிகளில் 21 மாவட்டங்களைச் சேர்ந்த 300க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் வேட்பாளர் தேர்வு நேர்காணலில் கலந்துகொண்டனர். புதிய தமிழகம் கட்சி வலுவாக உள்ள 120 தொகுதிகளில், வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ள 60 முதல் 70 தொகுதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அத்தொகுதிகளில் போட்டியிடும் புதிய தமிழகம் கட்சி வேட்பாளர்களின் பட்டியலை 29ஆம் தேதி சென்னையில் புதிய தமிழகம் கட்சியின் தலைமை அலுவலகத்தில் தலைவர் கிருஷ்ணசாமி வெளியிட உள்ளார். ஒன்றுபட்டு நின்று, நம்மை புறக்கணித்தவர்களை, நாம் புறக்கணிப்போம்'' என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போரில் எங்களது 'தற்காப்பு நடவடிக்கை' தேவைப்படும் வரை தொடரும் ஐ.நா.வில் ஈரான் திட்டவட்டம்

ஜெனிவா, மார்ச்.,28-

(சுவிட்சர்லாந்து): ஈரானுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிக்கு எதிராக உலகம் ஒன்றிணைய வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையத்தில் தெரிவித்த ஈரான் வெளியுறவு அமைச்சர் சையத் அப்பாஸ் அரக்சி, ''தேவைப்படும் வரை ஈரான் தன்னை தற்காத்துக் கொள்ளும்'' என்று கூறியுள்ளார்.

ஈரானில் பெண்கள் பள்ளி மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 160க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தது தொடர்பாக நடைபெற்ற ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையத்தில் காணொலி வாயிலாக பங்கேற்று உரையாற்றிய சையத் அப்பாஸ் அரக்சி, ''அநீதிகளுக்கு முன்னால் காட்டப்படும்



அலட்சியமும் மவுனமும் எந்த பாதுகாப்பையும் அமைதியையும் கொண்டு வராது. அது மேலும், பாதுகாப்பின்மையையும் உரிமை மீறல்களையும் வரவழைக்கும்.

ஐக்கிய நாடுகள் சபையும், அதன் அடிப்படைக் கோட்பாடுகளும், ஒட்டுமொத்த மனித உரிமை கட்டமைப்பும் கடுமையான ஆபத்தில் உள்ளன. நீங்கள் அனைவரும் ஆக்கிரமிப்பாளர்களைக் கண்டித்து, ஈரானியர்களுக்கு எதிராக அவர்கள் செய்யும் வெறுக்கத்தக்க குற்றங்களுக்கு அவர்களை பொறுப்பாக்க வேண்டும்.

ஈரான் ஒருபோதும் போரை நாடியதில்லை. ஈரானியர்கள் பூமியில் உள்ள வளமான நாகரிகங்களில் ஒன்றைப் பெற்ற ஓர் அமைதியான, உன்னதமான தேசத்தவர்கள்.

எனினும், கொடூரமான குற்றவாளிகளுக்கு எதிராகத் தங்களைத் தற்காத்துக் கொள்ள அவர்கள் முழுமையான உறுதியையும் தீர்மானத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர். தேவைப்படும் வரை ஈரான் தன்னை தற்காத்துக் கொள்ளும்.

அமெரிக்காவும் இஸ்ரேலும் அதிநவீன தொழில்நுட்பங்களையும் ராணுவ தரவு அமைப்புகளையும் கொண்ட நாடுகள். அந்த நாடுகளால் ஈரான் பள்ளி மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பது திட்டமிட்டு; வேண்டுமென்றே செய்யப்பட்டது. இந்த கொடூரத்தை நியாயப்படுத்தவோ, மறைக்கவோ முடியாது. மவுனத்துடனோ அலட்சியத்துடனோ இதை எதிர்கொள்ளக்கூடாது.

அமெரிக்காவும் இஸ்ரேலும் இணைந்து நடத்தி வரும் தாக்குதல்களில் செஞ்சிலுவைச் சங்க மீட்புப் பணியாளர்கள், சுத்திகரிப்பு நிலையங்கள், ஆம்புலன்ஸ்கள், மருத்துவமனைகள், சுகாதாரப் பணியாளர்கள், நீர் ஆதாரங்கள், குடியிருப்புப் பகுதிகள் உள்பட பல பொதுமக்களின் உள்கட்டமைப்புகள் குறிவைக்கப்பட்டுள்ளன.

ஈரான் முழுவதும் 600க்கும் மேற்பட்ட பள்ளிகள் இடிக்கப்பட்டுள்ளன அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ளன. இதன் காரணமாக 1,000க்கும் மேற்பட்ட மாணவர்களும் ஆசிரியர்களும் உயிரிழந்துள்ளனர் அல்லது காயமடைந்துள்ளனர்.

ஈரானுக்கு எதிராக இழைக்கப்படும் அட்டூழியங்களின் ஆழத்தை விவரிக்க போர்க்குற்றம் என்ற வார்த்தை போதாது. ஆக்கிரமிப்பாளர்களின் இலக்கு வைக்கும் முறையும் அவர்களின் சொல்லாடல்களும் இனப்படுகொலை செய்வதற்கான அவர்களின் தெளிவான நோக்கத்தின் சிறிதும் சந்தேகத்தை ஏற்படுத்தவில்லை. இது ஈரானுக்கு எதிரான தன்னிச்சையான நியாயமற்ற போர்'' எனத் தெரிவித்தார்

# அசாமில் மீண்டும் ஆட்சியைத் தக்க வைப்பாரா ஹிமந்த பிஸ்வா சர்மா?

குவாஹாட்டி, மார்ச்.,28-

அசாம் மாநில சட்டப்பேரவையிலுள்ள 126 தொகுதிகளுக்கு ஏப்ரல் 9ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது. ஹிமந்த பிஸ்வா சர்மா தொடர்ந்து 2 முறை வெற்றி பெற்று அசாமின் வெற்றிகரமான முதல்வராக வலம் வருகிறார்.

சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று ஆட்சியமைக்க 65 தொகுதிகள் தேவை. இந்தத் தேர்தலில் முக்கிய பிரச்சாரமாக கடந்த ஆண்டு மர்மமான முறையில் இறந்த பிரபல பாடகர் ஜூபின் கார்கின் விவகாரம் உள்ளது. இரு கட்சிகளுமே அந்தப் பிரச்சாரத்தை முன்னெடுத்து வருகின்றன.

அதுமட்டுமல்லாமல் பாஜக மேலிடம் 'ஜதி மதி பேட்டி' என்ற பிரச்சாரத்தைக் கையில் எடுத்துள்ளது. இது அசாம் மாநிலத்தில், பெரும்பாலும் சட்ட



விரோதக் குடியேற்றத்தை எதிர்த்துப் போராடும் சூழலில், அங்குள்ள பூர்வீக மக்களின் கலாச்சார அடையாளம், நில உரிமைகள் மற்றும் தங்கள் வீடுகளின் மீதான நியாயமான உடைமை ஆகியவற்றைப் பாதுகாப்பதை வலியுறுத்துவதற்காகப் பயன்படுத்தப்படும் ஓர் அரசியல் முழக்கமாகும். அந்த முழக்கத்தை முன்னெடுத்து வாக்கு வேட்டையாடி வருகிறது பாஜக.

அதேநேரத்தில், அசாமுக்கு புதிய தலைமை வேண்டும். அசாம் முழுவதுமே பாஜகவுக்கு எதிரான அலை காணப்படுவதாக தனது பிரச்சாரத்தில் கூறி வருகிறார் கவுரவ் கோகோய். முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, மாநிலம் முழுவதும் சூறாவளிப் பிரச்சாரத்தை மேற்கொண்டுள்ளார். அதேநேரத்தில் அவருக்குப் போட்டியாக களத்தில் இறங்கி கடும் சவால் அளித்து வருகிறார் கவுரவ் கோகோய்.

இந்தத் தேர்தலில் தனி மெஜாரிட்டியுடன் ஆட்சியமைக்க பாஜக மேலிடம் தீவிர பிரச்சாரத்தில் தலைவர்களை இறக்கி விட்டுள்ளது. அதேநேரத்தில் காங்கிரஸ் மேலிடம், இழந்த அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றுவதற்கு தீவிர முயற்சியில் இறங்கியுள்ளது. முதன்முறையாக கவுரவ் கோகோய் சட்டப் பேரவைத் தேர்தலில் களமிறங்கியுள்ளார். இது காங்கிரஸ் தொண்டர்களுக்கு உற்சாகத்தைக் கொடுத்துள்ளது.

# "தவெக பிரச்சாரத்துக்கு முட்டுக்கட்டை போடுவது பாசிச தாக்குதல்"

## விஜய் ஆவேசம்

சென்னை, மார்ச்.,28-

''நம்முடைய தேர்தல் பரப்புரை நிகழ்வுக்கு ஒரு நாளுக்கு முன்பு சென்னை மாநகராட்சி சார்பில் திடீரென அந்த இடத்தில் பள்ளம் தோண்டப்பட்டு, இரும்பால் ஆன தடுப்புகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த திடீர் பள்ளங்களும் தடுப்புகளும் எங்கிருந்து வந்தன?'' என தவெக தலைவர் விஜய் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் தனது எக்ஸ் தளத்தில், ''தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் திட்டமிடப்பட்ட பரப்புரைக்குச் சென்னை மாநகரக் காவல் துறையும், அதிகாரிகள் சிலரும் இணைந்து முட்டுக்கட்டை போட்டிருப்பது ஜனநாயகத்தின் மீது நடத்தப்பட்டுள்ள ஒரு பாசிசத் தாக்குதலே ஆகும்.

நிகழ்ச்சிக்கு இரண்டு நாள்கள் முன்பே தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில், சென்னை பெரம்பூர் சட்டப்பேரவைத் தொகுதி, முல்லை நகர் சந்திப்பில் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள அனுமதி கோரப்பட்டது.

ஆனால், நம்முடைய தேர்தல் பரப்புரை நிகழ்வுக்கு ஒரு நாளுக்கு



முன்பு சென்னை மாநகராட்சி சார்பில் திடீரென அந்த இடத்தில் பள்ளம் தோண்டப்பட்டு, இரும்பால் ஆன தடுப்புகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த திடீர் பள்ளங்களும் தடுப்புகளும் எங்கிருந்து வந்தன?

இந்த நிலையில் அங்கே காவல் துறை ஆய்வு செய்து 3000 பேர் கூடமுடியாது என்று கூறியுள்ளது. இதன் அடிப்படையில் தற்போது அந்த இடம் பிரச்சாரம் செய்வதற்கு உகந்ததல்ல என்று அனுமதி மறுக்கப்பட்டு, தமிழக வெற்றிக் கழகத்தின் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

இப்படி அதிகாரிகள் சிலரின் துணையுடன் தவெகவுக்கு எதிராகச் செயல்படும் திமுக காபந்து அரசுக்கு வெட்கமாக இல்லையா?

தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் நான் தேர்தல் பிரச்சாரம் மேற்கொள்ள முயற்சி செய்யும் போதெல்லாம், திமுக அரசு ஏதேதோ காரணங்களைக் கூறி, அனுமதியைத் தாமதிப்பதும் அல்லது அனுமதி மறுப்பதும் தொடர்கதையாகி வருகிறது.

மக்களின் பேராதரவைப் பெற்ற ஒரு புதிய அரசியல் கட்சியின் ஜனநாயக உரிமைகளைத் திட்டமிட்டு நசுக்கும் இந்தச் செயல், ஆளுங்கட்சியின் ஏவலர்களாக அதிகாரிகள் சிலர் செயல்படுகிறார்களா என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது.

அத்துடன் ''எங்களுக்கு எதிராக யார் உருவெடுத்தாலும் அவர்களை அதிகார பலத்தால் நசுக்குவோம்'' என நினைப்பது அப்பட்டமான அடக்குமுறையே ஆகும். தமிழக வெற்றிக் கழகத்தைக் கண்டு திமுக எந்த அளவுக்கு அஞ்சுகிறது என்பதற்கு இந்தத் தடையே சாட்சி. எனவே, வரும் சட்டமன்றத் தேர்தலில் ஜனநாயக விரோதத் திமுக ஆட்சியைத் தமிழக மக்கள், வீட்டுக்கு அனுப்பப் போவது உறுதி'' என்று விஜய் தெரிவித்துள்ளார்

# 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி பேருந்து சேவை

சென்னை, மார்ச்.,28-

சட்டப்பேரவைத் தேர்தலை முன்னிட்டு சென்னையில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சி பேருந்து சேவையை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் நேற்று தொடங்கி வைத்தார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டப்பேரவைத் தொகுதிகளில் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியம் குறித்து, வாக்காளர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ''தேர்தல் திருவிழா ஸ்ரீ தமிழ்நாட்டின் பெருவிழா'' எனும் தேர்தல் விழிப்புணர்வு கண்காட்சிப் பேருந்து மற்றும் வாகனங்கள் சேவை தொடக்க விழா ரிப்பன் மாளிகை வளாகத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் சென்னை மாவட்ட தேர்தல் அதிகாரி ஜெ.குமரகுருபரன் பங்கேற்று விழிப்புணர்வு வாகன சேவையை கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

இந்த பேருந்து சென்னை மாவட்டத்துக்கு உட்பட்ட 16 தொகுதிகளிலும் பொதுமக்கள் அதிகம் கூடுமிடங்களில் நிறுத்தப்பட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.



■ மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் சித்திரை திருவிழா மற்றும் அருள்மிகு கள்ளழகர் வைகை ஆற்றில் இறங்கும் வைபவம் ஆகிய நிகழ்ச்சிகளின் முன்னேற்பாடு மற்றும் பாதுகாப்பு பணிகள் குறித்து ஆலோசனைக் கூட்டம் தொடர்புடைய அலுவலர்களுடன். மாவட் ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன் குமார் இ.ஆ.ப., தலைமையில் மாநகர காவல் ஆணையாளர்முனைவர் ஜெ.லோகநாதன், இ.கா.ப., முன்னிலையில் நடைபெற்றது. மாநகராட்சி ஆணையாளர் சித்ரா விஜயன் இ.ஆ.ப., ,மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.கே. அரவிந்த் இ.கா.ப., , மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்

# புதுச்சேரியில் தவெக கூட்டணி கட்சிக்கு பொது சின்னம் கோரிய மனு தள்ளுபடி

சென்னை, மார்ச்., 28-


புதுச்சேரியில் தமிழக வெற்றிக்கழக கூட்டணியில் உள்ள கட்சி பொது சின்னம் கோரிய மனுவை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளது.

புதுச்சேரியில் சட்டப்பேரவைத் தேர்தல் ஏப்.9ம் தேதி நடைபெறவுள்ளது. இதற்கான வேட்புமனு தாக்கல் மார்ச் 23ம் தேதி மாலை 3 மணியுடன் முடிவடைந்தது. புதுச்சேரியில் தவெகவுடன் நேயம் மக்கள் கழகம் கூட்டணி அமைத்து 2 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

இந்நிலையில் நேயம் மக்கள் கழகத்தின் தலைவரான நேரு என்ற குப்புசாமி தங்களது கட்சிக்கு பொது சின்னம் வழங்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிடக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

தலைமை நீதிபதி அமர்வு விசாரணை

இந்த வழக்கு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி மற்றும் நீதிபதி ஜி. அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது.



அப்போது மனுதாரர் தரப்பில் ''எங்களது கட்சி புதுச்சேரியில் வேட்பு மனு தாக்கல் முடிவடைந்த மார்ச் 23 அன்று மாலை 5.30 மணிக்குத்தான் தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டது.

ஆனால் அதற்கு முன்பாகவே நாங்கள் முறையாக விண்ணப்பித்து விட்டோம். எனவே தவெக கூட்டணியில் இணைந்து 2 தொகுதிகளில் போட்டியிடும் எங்களது கட்சிக்கு பொது சின்னம் ஒதுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும்'' என வாதிடப்பட்டது.

அதையடுத்து நீதிபதிகள், ''வேட்புமனு தாக்கல் நிறைவடைந்து விட்டால் தேர்தல் ஆணையம் சின்னம் ஒதுக்கீடு உள்ளிட்ட பணிகளைத் தொடங்கி விடும். இந்த தேர்தலில் மனுதாரர் கட்சிக்கு சுயேச்சை வேட்பாளருக்கான சின்னமே கிடைக்கும்.

அடுத்த தேர்தலில் வேண்டுமென்றால் பொது சின்னம் கோரலாம்'' எனக்கூறி வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்

# அண்ணா பல்கலை., மாணவிக்கு பேராசிரியர் பாலியல் தொல்லை நடவடிக்கை கோரும் அண்ணாமலை

சென்னை, மார்ச்.,28-

அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக, பேராசிரியர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ள நிலையில், இந்த விவகாரத்தில் முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும் என்று அண்ணாமலை வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக பாஜக முன்னாள் மாநில தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள அறிக்கையில், ''அண்ணா பல்கலைக்கழகத்தில், மாணவிக்கு பாலியல் தொல்லை கொடுத்ததாக, பேராசிரியர் மீது வந்துள்ள குற்றச்சாட்டு மிகுந்த அதிர்ச்சி அளிக்கிறது. மாணவிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட வேண்டிய கல்வி நிறுவனங்களிலேயே, தொடர்ந்து இத்தகைய சம்பவங்கள் நடப்பது



துரதிருஷ்டவசமானது மற்றும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

சுமார் இரண்டு ஆண்டுகளாக, பேராசிரியர் பாலியல் சீண்டல்களில் ஈடுபட்டு வந்ததாக, மாணவி புகார் கூறியிருக்கிறார். மேலும் பல மாணவிகளும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும், பாதுகாப்பான முறையில், அவரது பாடப்பிரிவு மாணவிகளிடம் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த குற்றச்சாட்டு தொடர்பாக, முழுமையான விசாரணை நடத்தி, உண்மையை வெளிக் கொண்டு வர வேண்டிய பொறுப்பு, தமிழக காவல்துறைக்கு உள்ளது. பாதிக்கப்பட்டுள்ள மாணவியின் கோரிக்கையை ஏற்று, அவரது வகுப்பு மாணவியர் அனைவரிடமும், ரகசிய முறையில் விசாரணை நடத்தப்பட வேண்டும். அனைத்து மாணவிகளுக்கும், பாதுகாப்பு வழங்கப்பட வேண்டும். பேராசிரியர் குற்றம் செய்துள்ளது நிரூபிக்கப்பட்டால் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

கடந்த ஆண்டு, அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் தாக்குதலுக்கு உள்ளான போது, உயர்கல்வித்துறை அமைச்சர், அனைத்து பல்கலைக்கழக உயர் அதிகாரிகளுடன் சந்திப்பு நடத்தினார். ஆனால், அதே காலகட்டத்தில், மேலும் பல மாணவிகள், பாதிக்கப்பட்டிருக்கின்றனர். அண்ணா பல்கலைக்கழகத்தில் உள்ள, 'பாலியல் தொல்லை தடுப்பு மற்றும் புகார் விசாரணைக் குழு' (றிஷீஷிபி) உண்மையில் செயல்பாட்டில் இருக்கிறதா என்ற கேள்வி எழுகிறது.

இரண்டு ஆண்டுகளாக ஒரு மாணவி பாதிப்புக்குள்ளாகியிருக்கிறார். மேலும் பல மாணவிகள், பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்று புகார் எழுந்துள்ளது. இவற்றைக் கண்டறிந்து, நடவடிக்கை எடுக்க வேண்டிய இந்தக் குழு என்ன செய்து கொண்டிருக்கிறது? தமிழக உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பொதுமக்களுக்குப் பதில் அளிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்.

கடந்த ஆண்டு அண்ணா பல்கலைக்கழக மாணவி, பாலியல் தாக்குதலுக்கு உள்ளான வழக்கில் காவல்துறை செய்த தவறுகளை, மீண்டும் செய்யாமல் இருக்க வேண்டும் என்ற எச்சரிக்கை கலந்த வேண்டுகோளை, தமிழக காவல்துறைக்கு வைத்துக் கொள்கிறேன்.

கல்வி கற்க வரும் மாணவிகளின் பாதுகாப்பை உறுதி செய்வது அரசு மற்றும் கல்வி நிலைய நிர்வாகங்களின் கடமை. இந்த விவகாரத்தில் முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டும்.

பாலியல் சீண்டலுக்கு உள்ளானவர், பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் மாணவிகள் தயங்காமல் முன்வந்து புகார் அளிக்க வேண்டும். உங்கள் துணிச்சலே குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தும்'' என தெரிவித்துள்ளார்.



■ தென்காசி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காசிவிஸ்வநாதர் திருக்கோவில் வளாகத்தில், நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 ஐ முன்னிட்டு மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் சார்பில், 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், வாக்காளர் தின உறுதி மொழியினை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல்கிஷோர் ஏற்றுக்கொள்ள, அனைவரும் ஏற்றுக்கொண்டார்கள்.



■ சம்பவம்: 2026 தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு, தேனிஅல்லிநகரம் நகராட்சி வள்ளி நகர் பகுதியில் சிறப்பு வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் ப.ராஜ்குமார் தலைமையில், அப்பகுதியில் வசிக்கும் திருநங்கைகளிடம் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது. விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டு, ஜனநாயகக் கடமையை ஆற்ற வலியுறுத்தப்பட்டது.



## முடுவார்பட்டி ஸ்ரீ காமாட்சியம்மன் கோவில் பங்குனித் திருவிழா பல்லாக்கில் அம்மன் வீதி உலா

அலங்காநல்லூர் மார்ச். 28-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள முடுவார்பட்டி கிராமத்தில் அருள்மிகு ஸ்ரீ காமாட்சியம்மன் கோவில் பங்குனித் திருவிழா வெகுவிமரிசையாக நடைபெற்றது.

திருவிழாவின் முதல் நிகழ்வாக ஊற்றுக்குச் சென்று தீர்த்தமாடி, காப்பு கட்டுதல், கொடியேற்றுதல் மற்றும் முகூர்த்தக்கால் ஊன்றுதல் நடைபெற்றது. தொடர்ந்து பிரம்ம கவுண்டர் சித்தர் கோவில், அய்யனார் கோவில், கட்டிச்சோத்துகருப்பு கோவில் மற்றும் கன்னிமார் கோவில் உற்சவ விழாக்கள் நடைபெற்றன.

இவ்விழாவில் முடுவார்பட்டி மற்றும் அதன் சுற்றுவட்டார கிராமங்களான ஆதனூர், தேவசேரி, அழகாபுரி, லிங்காவடி உள்ளிட்ட பகுதிகளிலிருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். பக்தர்களுக்குப் பூஜை பொருட்களும், அன்னதானமும் வழங்கப்பட்டன.

முடுவார்பட்டி, ஆதனூர் உள்ளிட்ட எட்டு கிராமங்களைச் சேர்ந்த கவுண்டர்களுக்குப் பாத்தியப்பட்ட கோவில் நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் இதற்கான சிறப்பான ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்.



## “வேத மந்திரங்கள் முழங்க உடுமலை தத்வமஸி ஸ்ரீ சபரி ஐயப்பன் கோவில் மகா கும்பாபிஷேகம்

உடுமலை மார்ச். 28-

திருப்பூர் மாவட்டம் உடுமலை வட்டம், கணக்கம்பாளையம் ஊராட்சி அலுவலகம் அருகே அமைந்துள்ள தத்வமஸி ஸ்ரீ சபரி ஐயப்பன் திருக்கோவில் வளாகத்தில், அருள்மிகு கன்னிமூல கணபதி திருக்கோவில் மகா கும்பாபிஷேகப் பெருவிழா நேற்று வெகுவிமரிசையாக நடைபெற்றது.

கும்பாபிஷேகத்தை முன்னிட்டு யாகசாலையில் வைத்துப் பூஜிக்கப்பட்ட புனித தீர்த்தக் கலசங்கள், மங்கள வாத்தியங்கள் மற்றும் வேத மந்திரங்கள் முழங்கக் கோபுர கலசத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டன. பின்னர், சிவாச்சாரியார்கள் வேதங்கள் ஓத, புனித நீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்த ஆன்மீக வைபவத்தில் உடுமலை மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த ஐயப்ப பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். விழாவிற்கு வருகை தந்த அனைவருக்கும் திருக்கோவில் நிர்வாகம் சார்பில் அன்னதானம் வழங்கப்பட்டது. ஸ்ரீ சபரி ஐயப்பன் திருக்கோவில் நிர்வாகிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் ஒன்றிணைந்து இதற்கான விரிவான ஏற்பாடுகளைச் சீரும் சிறப்புமாகச் செய்திருந்தனர்.




## காந்திகிராமத்தில் சர்வதேச கணித மாநாடு துணைவேந்தர் ந.பஞ்சநதம் தொடங்கி வைத்தார்

சின்னாளபட்டி மார்ச். 28-

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத்தின் கணிதத்துறை சார்பில், "செயற்கை நுண்ணறிவு மற்றும் மருத்துவ மில்லினியத்தில் பயன்பாட்டு கணிதத்தின் எதிரொலிப்பு" என்ற தலைப்பிலான மூன்று நாள் சர்வதேச மாநாடு தொடங்கியது.

*துணைவேந்தர் உரை:*

மாநாட்டைத் தொடங்கி வைத்துச் சிறப்பு மலரை வெளியிட்ட பல்கலைக்கழக துணைவேந்தர் ந.பஞ்சநதம், "யு.ஜி.சி, ஏ.என்.ஆர்.எப் மற்றும் சி.எஸ்.ஐ.ஆர் போன்ற மத்திய உயர்கல்வி நிறுவனங்களின் நிதிப் பங்களிப்புடன் நடைபெறும் இந்த மாநாட்டை மாணவர்கள் தங்களின் ஆராய்ச்சித் திறனை மேம்படுத்த நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

*மாநாட்டின் சிறப்பம்சங்கள்:*

சர்வதேசப் பங்கேற்பு: ஐக்கிய இராச்சியம் (ஹிரி), இலங்கை உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் கணித வல்லுநர்கள் இதில் பங்கேற்று உரையாற்றுகின்றனர். ஆய்வுக் கட்டுரைகள்: மூன்று நாட்கள் நடைபெறும் இந்த மாநாட்டில் மொத்தம் 210 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

ஒப்பந்தம்: கணிதத் துறையில் மேம்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ள, பல்கலைக்கழகத்திற்கும் 'எப்.ஏ.ஐ' (FAI) நிறுவனத்திற்கும் இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது.

முன்னதாகப் பேராசிரியர் ஜி.மகாதேவன் வரவேற்புரை ஆற்றினார். அறிவியல் புலத்தின் தலைவர் பி.பாலசுப்ரமணியம் மாநாட்டைத் தொகுத்து வழங்கினார். இந்த மாநாடு வரும் மார்ச் 28ம் தேதி வரை நடைபெறவுள்ளது.



## “பயணங்களே காந்தியைத் தலைவராக்கியது!” பயண இலக்கியக் கருத்தரங்கில் உலகப் பயணி அருணகிரி நெகிழ்ச்சி

சின்னாளபட்டி மார்ச். 28-

திண்டுக்கல் காந்திகிராம கிராமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை சார்பில், "தமிழில் பயண இலக்கியங்களின் நோக்கும் போக்கும்" என்ற தலைப்பில் இரண்டு நாள் தேசியக் கருத்தரங்கம் தமிழ்த்துறைத் தலைவர் பா. ஆனந்தகுமார் தலைமையில் நடைபெற்றது.

30 நாடுகளுக்கு மேல் பயணம் செய்த உலகப் பயணி அருணகிரி உரையாற்றுகையில், "காந்தியின் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயணங்களே அவரை ஒரு தேசியத் தலைவராக மாற்றியது" என்று குறிப்பிட்டுத் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார். கருத்தரங்க ஒருங்கிணைப்பாளர் சி. சிதம்பரம், பயண இலக்கியத்தின் முன்னோடியான ஏ.கே. செட்டியார் அவர்களை அறிமுகப்படுத்தி, தமிழ் இலக்கியத்தில் இப்பதிவுகள் தொன்றுதொட்டே இருப்பதை விளக்கினார்.

பேராசிரியர் பா. ஆனந்தகுமார் தனது தலைமையுரையில், சீனர்கள், கிரேக்கர்கள் மற்றும் சோழர்களின் பயணங்கள் எவ்வாறு சமூக, அரசியல் மற்றும் பண்பாட்டு மாற்றங்களை ஆவணப்படுத்தியுள்ளன என்பதைச் சான்றுகளுடன் எடுத்துரைத்தார். முத்துக்கமலம் மின்னிதழ் ஆசிரியர் தேனி மு. சுப்பிரமணி அவர்கள், பயணங்கள் மூலம் கிடைக்கும் அனுபவங்கள் மற்றும் விருதுகள் குறித்து மாணவர்களிடையே உரையாற்றினார்.

சங்க காலம் முதல் சமகாலம் வரையிலான பயண இலக்கியங்கள் குறித்துப் பல்வேறு ஆய்வறிஞர்கள் தங்களது ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர். ஆய்வாளர்களும் மாணவர்களும் பெருமளவில் கலந்துகொண்டு பயனடைந்தனர்.



## “வாழ்த்து மழையில் நனைந்த மாவட்டத் தலைவர்!” பிறந்தநாளைக் கொண்டாடிய பாஜக நிர்வாகிகள்

தென்காசி மார்ச். 28-

தென்காசி மாவட்ட பாரதிய ஜனதா கட்சியின் தலைவர் ஆனந்தன் அய்யாச்சாமி ன் 48வது பிறந்தநாளினை முன்னிட்டு, விஸ்வநாதபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாகக் கலந்து கொண்டு உற்சாகமாகக் கொண்டாடினர்.

மாவட்டத் தலைவரின் 48வது பிறந்தநாளை முன்னிட்டு நடைபெற்ற இந்த விழாவில், கேக் வெட்டப்பட்டு அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன. தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டப் பொறுப்பாளர்கள், நகர, ஒன்றிய மற்றும் பேரூர் கிளைக்கழக நிர்வாகிகள் என ஏராளமானோர் திரண்டு வந்து அவருக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.



■ திண்டுக்கல் மாவட்டத்தில் 100% வாக்கு பதிவினை வலியுறுத்தி, தோட்டக்கலை துறை சார்பாக காய்கறிகள் வைத்து உருவாக்கப்பட்ட மாவட்ட தேர்தல் லோகோ (DINDU) - விழிப்புணர்வு நிகழ்வை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் சரவணன் துவக்கி வைத்தார்.

ஸ்ரீ கோமதி அம்பாள் டிராவல்ஸ்



ஏர் புஷ்பேக் சொகுசு பேருந்து வாடகைக்கு கிடைக்கும்
சங்கரன்கோவில்
ஆறுமுகம் - 98657 64957

கேரளா பர்னிச்சர்




ரயில்வே பீட்டர் ரோடு, சங்கரன்கோவில் 627756
9895544685 / 7092779356

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000 SPECIAL OFFER



ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004

S. பிச்சையா ஆச்சாரி சன்ஸ்-ன்
ஸ்ரீ முருகன் ஜீவல்லரி மார்ட் A/C
HALL MARK
தங்கம் ★ வெள்ளி ★ வைரம்
9443081168 8438442557 9994638971
நகை சேமிப்பிற்கு செய்கூலி, சேதாரம் கிடையாது.
Sri Murugan Jewellery Mart
உரிமையாளர்கள்
P.மணிகண்டன் B.Com., 78452 54592
P.பட்டு சங்கர் B.E., 99946 38971
41, மெயின் ரோடு, சங்கரன்கோவில்.
98945 71069

SPARES 2 WHEELER
SDK spare parts
HERO HONDA, TVS, BAJAJ, ROYAL ENFIELD, KTM, YAMAHA
ஒரிஜினல் ஸ்பேர்ஸ் கிடைக்கும்
No.3, மாஸ்டர் வீவர்ஸ் அசோசியேஷன் காம்ப்ளக்ஸ், சங்கரன்கோவில்
7540002331 / 9865147105

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000